**செ. கு. எண்: 171** **நாள் : 04.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

இரங்கல் செய்தி – நாள் 4.12.2015

தமிழக வரலாற்றில் தனி இடம் பெற்றுள்ள தகைசால் குடும்பமான செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சேர்ந்த திரு எம்.ஏ.எம்.ராமசாமி அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி தனது 84-வது வயதில் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த மன வேதனையும், துயரமும் அடைந்தேன்.

தமிழ் மொழியின் உயர்வுக்காகவும், தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காகவும் அரிய சமூகப் பணிகள் ஆற்றி தனிப் பெருமை கொண்ட தமிழ்வேள் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் அருமைப் பேரனும், திரு ராஜா சர் எம்.ஏ.முத்தையா செட்டியாரின் அன்பு மகன் திரு எம்.ஏ.எம். ராமசாமி அவர்கள், தமிழ்ச் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் அரும்பணிகள் ஆற்றியவர் ஆவார். அறிவுபூர்வமான சிந்தனைகளையும், புதுமை எண்ணங்களையும் தனக்குள் தாங்கி கல்வி, கலை மற்றும் தமிழ்க் கலாச்சாரத்திற்காக பணியாற்றியவர் திரு எம்.ஏ.எம். ராமசாமி அவர்கள்.

திரு எம்.ஏ.எம். ராமசாமி அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக திறம்பட பணியாற்றியவர். இவர் அன்பும், அடக்கமும், எளிமையும் நிறைந்தவர். பழகுவதற்கு இனிமையான பண்பாளர்.

திரு எம்.ஏ.எம்.ராமசாமி அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பெரிய இழப்பாகும். திரு எம்.ஏ.எம்.ராமசாமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**